# ஐ. நா.வுக்கு ஈரான் விசேட பிரதிநிதியை அனுப்பாது

## வெளிநாட்டமைச்சர் கூறுகிறார்

தெஹ்ரான், டிச. 3

ஈரான்-அமெரிக்கநெருக்கடி குறித்து நேரடிப் பேச்சு வார்த்தை நடத்த ஐக்கிய நாடுகள் சபைக்கு விசேட தூதுவர் எவரையும் ஈரான் அனுப்பமாட்டாது விசேட தூதுவரை ஐக்கியநாடுகள் பாதுகாப்புச் சபைக்கு ஈரான் அனுப்பவுள்ளதாக வெளிவந்த செய்திகளில் எதுவித உண்மையும் இல்லை

இவ்வாறு ஈரானின் புதிய வெளிநாட்டமைச்சர் ஜனுப் சதெத் கொட்பஸதே தெரிவித்துள்ளார்

பாதுகாப்புச் சபையில் ஈரானின் பிரதிநிதித்துவத்தைத் தொடர்ந்து வைத்திருப்பதன் பொருட்டே பிரதிநிதி ஒருவர் ஐ நா வுக்கு அனுப்பப்பட விருக்கிறாரென்றும் அவர் கூறினார்

ஐ நா வுக்குச் செல்லும் பிரதிநிதி, அங்கு பணயக் கைதிகள் விவகாரம் பற்றி எவருடனும் பேச்சுநடத்தவோ அன்றி ஐ நா பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளவோ மாட்டாரென்றும் வெளிநாட்டமைச்சர் தெரிவித்துள்ளார்

## ஹொக்கிவீரர் காலமானர்

புதுடில்லி, டிச. 3

இந்திய பிரபல ஹொக்கி வீரர் மேஜர் தயான் சந்த் தமது 73வது வயதில் நேற்று காலை காலமானர் (இ)

கப்பல் பேரம் விவகாரம்:

# குற்றச்சாட்டு தவறு என்று நிரூபிக்க முடியுமா?

## எம். ஜி. ஆருக்கு கலைஞர் அறைகூவல்

சேலம், டிச. 3

சேலத்தில் நடைபெற்ற தேர்தல் மாநாட்டில் கலந்து கொண்ட தி மு க தலைவர் திரு மு கருணாநிதி, கப்பல் பேர சம்பந்தமாக தமிழக முதல்வர் திரு எம் ஜி ராமச்சந்திரன் மீது தான் சுமத்திய குற்றச்சாட்டை தவறு என்று முதல்வரினால் நிரூபிக்க முடியுமா என்று நேற்றுமுன்தினம் அறைகூவல் விடுத்தார்.

போதுமான ஆதாரங்களுடன் தான் தமிழ்நாடு சட்டப் பேரவையில் இக்குற்றச்சாட்டைத் தான் சுமத்தியதாகக் குறிப்பிட்ட கலைஞர், தான் கூறுவது பொய் என்றால் தம் மீது நீதிமன்றத்தில் தமிழக முதல்வர் வழக்குத் தாக்கல் செய்யட்டுமென்றும் சவால் விடுத்தார்

தேர்தல் செலவுகளுக்காக

# திருமதி காந்தி தொழில் அதிபர்களிடம் பெருநிதி பெறுகிறாராம்

## சரண் சிங் குற்றச்சாட்டு

புதுடில்லி டிச 3

திருமதி இந்திரா காந்தி தமது தேர்தல் செலவுக்காக தொழிலதிபர்களிடமிருந்து பெருந்தொகைப் பணத்தைப் பெற்றுவருகிறார்.

இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு சரண்சிங் தெரிவித்தார்

மீரட்டில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:

திருமதி இந்திரா காந்தியால் மட்டுமே இந்தியாவின் பிரச்னை களைத் தீர்க்க முடியுமென்று கூறப்படுகிறது இது ஏற்க மற்ற பேச்சாகும்

வறுமையை ஒழிப்பதாகக் கோஷமிட்டு வந்த திருமதி காந்தியின் ஆட்சியிலேயே இந்த நாட்டில் வறுமை அதிகரித்தது (இ)

## இந்திய கம்யூனிஸ்ட் -- அ. தி. மு. க. கூட்டு ஒப்பந்தம்

சென்னை, டிச 3

இந்திய கம்யூனிஸ்டும் அ தி மு க வுடன் தமிழ்நாட்டில் லோகசபைத் தேர்தலில் அ தி மு க வுடன் இணைந்து போட்டியிடும்.

இந்திய கம்யூனிஸ்ட் தமிழ் நாடு செயலாளர் திரு. எம். கல்யாணசுந்தரம் தமிழக முதல்வர் திரு எம் ஜி இராமச்சந்திரன் ஆகியோருக்கிடையே நடந்த பேச்சுவார்த்தைகளை

(5ம் பக்கம் பார்க்க)

# பேச்சுவார்த்தை மூலமே பிரச்னையைத் தீர்க்கலாம்

## வால்ட்ஹெய்ம் கூறுகிறார்

பணயக்கைதிகள் விவகாரத்தை சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்க்க முடியுமென்று ஐக்கியநாடுகள் பொதுச்செயலாளர் டாக்டர் குர்ட் வால்ட்ஹெய்ம் தெரிவித்துள்ளார்

ஈரானிய வெளிநாட்டமைச்சர் ஜனுப் சதெத் கொட்பஸதேயைத் தாம் சந்தித்து பேச்சு நடத்தியதாகவும் அவரும் இதே கருத்தையே தெரிவித்ததாகவும் டாக்டர் வால்ட்ஹெய்ம் தெரிவித்தார். (இ)

யு. எஸ். தூதரகம் தீக்கிரை:

# ஆர்ப்பாட்டக்காரர் மீது நச்சுப்புகை பிரயோகம்

## அமெரிக்க குற்றச்சாட்டுக்கு லிபியா பதில்

திரிப்போலி, டிச 3

லிபியாவிலுள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு முன் ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் மீது தூதரகத்திலிருந்த அமெரிக்க அதிகாரி நச்சுப்புகைப் பிரயோகம் நடத்தியதையடுத்து பல மாணவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

இச்சம்பவத்தை அடுத்தே ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆத்திரமடைந்து அமெரிக்க தூதரகத்தைத் தீக்கிரையாக்கினர்.

இவ்வாறு லிபிய வெளிநாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

தூதரகம் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் குறித்து அமெரிக்கா லிபியா மீது தெரிவித்த குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே லிபியாமேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

### கொமெய்னியை கடாபி கோருவார்

இதே வேளையில், அமெரிக்க தூதரகப் பணயக் கைதிகளை விடுவிக்குமாறு தாம் ஈரானிய மதத்தலைவர் அயத்தொல்லா கொமெய்னியைக் கேட்கப் போவதாக லிபியத் தலைவர் கேர்ணல் கடாபி பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்துள்ளார் (இ)

# கைகளைக் கயிற்றல் கட்டி கிணற்றில் குதித்து தற்கொலை

(யாழ்ப்பாணம்)

படித்துவிட்டு வேலையற்றிருந்ததால் மனவிரக்தியுற்ற இளைஞர் ஒருவர் தனது கைகள் இரண்டையும் கயிற்றால்கட்டி கிணற்றில் குதித்து மரணமான சம்பவம் ஒட்டிசுட்டானில் நிகழ்ந்துள்ளது.

முத்தையன்கட்டு திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு பொன் தியாகராசா மேற்படி மரணவிசாரணையை நடத்திய போது, மரணமான செல்வராசா (25 வயது) வின் தந்தை சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

நாங்கள் அரியாலையில் இருந்து பலவருடங்களுக்கு முன்னர் தொழில்தேடி ஒட்டுசுட்டானுக்கு வந்தோம், நான் தென்னை வியாபாரம் செய்கிறேன், எனது மகன் செல்வராசா படித்துமுடித்தபின் உத்தியோகம் கிடைக்குமென எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். வேலை கிடைக்காததால் முன்பு ஒருமுறை நித்திரைக்குளிசை சாப்பிட்டு தற்கொலைசெய்ய முயன்றார். இதன்பின்னரும் தற்கொலை செய்யப்போவதாக அவர் கூறித் திரிந்தார், சம்பவதினம் மாலை 4 மணியளவில் வீட்டிலுள்ள கிணற்றில் ஏதோ விழுந்த சத்தம் கேட்டது. மகனைக்காணாததால் சந்தேகம் கொண்டு எல்லா இடமும் தேடினேன் காணவில்லை, வீட்டுக்கிணற்றை எட்டிப்பார்த்தோம் அங்கும் காணாததால் நண்பர்களின் உதவியுடன் கிணற்றில் இறங்கித் தேடிப்பார்த்தோம். அப்பொழுது தண்ணீரில் மூழ்கியநிலையில் எனது மகனைப் பிணமாக வெளியே எடுத்தோம். அப்போது மகனின் கைகள் இரண்டும் கயிற்றினால் கட்டப்பட்டிருந்தது. அவர் தானே விரும்பிக் கைகளைக் கட்டிக்கொண்டு கிணற்றில் விழுந்து இறந்திருப்பார் என்பதில் எமக்கு எதுவித சந்தேகமுமில்லை என்றார்,

மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்புவழங்கினார்.

முல்லைத்தீவுப் பொலிஸ் சார்ஜன்ட் சாட்சியமளித்தார்.

(செ)



